
# விழிப்பு

அக்கினி குஞ்சொன்று கண்டேன் அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு – தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ !.
- பாரதி -

மலையக மக்களின் மனித உரிமை, மனித கௌரவம், சமாதான சகவாழ்விற்கான உரிமை என்பவற்றை மேம்படுத்தலுக்கும், பாதுகாப்பதற்குமான ஒரு முயற்சி .........



**Villippu** - பார்வை 8, 2006 - **HUMAN DEVELOPMENT ORGANIZATION - HDO**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்பின் உள்ளே.......


- பெண்களின் இரண்டாம் தர நிலை அல்லது கீழ்நிலை அந்தஸ்துடன் தொடர்பான பொய்மைகளும் உண்மைகளும்
- கவிச்சோலை.
- பெண்களுக்கெதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச சாசனம்.

மனித அபிவிருத்தித் தாபனம் HDO மலையக சமூகத்தின் நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு தனது செயற்றிட்டங்களை மக்களுக்கு வழங்கி வருகின்றது.


மனித உரிமைகள், மனித கௌரவம் என்பனவற்றைப் பேணுவதோடு சமூகத்தில் சிறந்ததொரு மாற்றத்தினை ஏற்படுத்த விளைவதற்கான முயற்சியே விழிப்பு.

விழிப்பு தனது சேவையைச் சிறந்த முறையில் வழங்குவதற்கு வாசகர்களின் ஆக்கங்களையும், விமர்சனங்களை எதிர்ப்பார்க்கின்றது.

**HDO - வெளியீடுகள்**




கல்விக்கான உரிமை




மலையக மக்களின் கொள்கை பிரகடனம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் இரண்டாம் தரநிலை அல்லது கீழ் நிலை அந்தஸ்துடன் தொடர்பான பொய்மைகளும் உண்மைகளும்.

✍சுல்பிகா

முதலில் இரண்டாம் தரநிலை அல்லது கீழ்நிலை அந்தஸ்து என்பதால் குறிப்பிடப்படுவது யாது என விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

உயிரியல் ரீதியாக ஆண்களும் பெண்களும் சமபெறுமானமுள்ள அந்தஸ்து உடையவர்களாகவே காணப்படுகின்றனர். அதாவது உடலமைப்பு, உடற்றொழிற்பாடு ரீதியாக வேறுபட்டிருந்தலும், அவ்வேறுபட்ட உடலமைப்பு, உடற்றொழிற்பாடு ஆகியன சம பெறுமான முடையவை. ஒன்றினது அமைப்பையோ, தொழிற்பாட்டையோ இன்னொன்று ஈடுசெய்ய முடியாது. இந்நிலையில் சமூக நோக்குகள் இவ்விரு வேறுப்பட்ட நிலைகளையும், சமமற்ற பெறுமானமுடையனவாக எடுத்துரைக்க முயல்கின்றது. அத்துடன் ஆணின் உடலமைப்பும் தொழிற்பாடும் அதனுடன் கூடிய பிற அம்சங்களும் உயர்ந்த அந்தஸ்துடையனவாகவும், பெண்களின் உடலமைப்பும், தொழிற்பாடும் அதனுடன் கூடிய பிற அம்சங்களும் குறைவான கணிப்பிற் குரியனவாகவும் எடுத்து உரைக்கப்படுகின்றன. இவ்வம்சம் தனிமனிதனின் உயிரில் அமைப்பு என்ற நிலையிலிருந்து விஸ்தரிக்கப்பட்டு சமூக அம்சங்களிலும் பிரதிபலிக்கப்படுகின்றது.

அதாவது மேற்கூறிய அம்சங்களின் அடிப்படையில் அமைந்த சமூக, பொருளாதார, அரசியல் போன்ற ஆண்களும் பெண்களும் ஈடுபடும் துறைகளிலும் அந்தஸ்து வேறுபாட்டினையும், குறிப்பாக பெண்களுக்கு குறைவான அந்தஸ்து நிலைகளையும் வழங்குகின்றன. எனவே பெண்களுடன் தொடர்பான எல்லா விடயங்களிலும், பெண்களின் கீழ்நிலை அந்தஸ்து பிரதிபலிக்கக் கூடியதாக சமூகக் கருத்தாக்கங்களும் உருவாக்கப்ப ட்டுள்ளன.

உதாரணமாக வீட்டில் பெண்களின் பங்கு நிலை (கடமைக் கூறு), வெளியுறவு நிலை, சுதந்திரமான நடமாட்டம் உடலியல் அம்சங்கள் போன்ற எல்லா அம்சங்களிலும் சமூக நோக்கு இவ்வாறே அமைந்துள்ளது. அடிப்படையில் பெண்களின் உடல் வலிமையின்மையும், இனப்பெருக்கத் தொழிற்பாடுமே இதற்கான காரணமாகக் கூறப்பட்டு நியாயப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான சமூக நோக்கு எவ்வாறு உருவாகியது என்பது பற்றி அறிவதற்கு பால் நிலைப்பாடு பற்றிய எண்ணக்கருவின் உருவாக்கம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதை அறிவது பயனுடையதாகும்.

ஆதிகால மனிதக்குழுக்கள், இடம் விட்டு இடம்பெயர்ந்து அதாவது நாடோடிகளாக வாழ்ந்து வந்தனர். இவ்வாறான அவர்களது வாழ்க்கை முறை உணவுக்காகவும் உறைவிடத்திற்காகவும் காட்டில் வெகுதூரம் அலையும் சந்தர்ப்பங்களை உருவாக்கியது. பெண்களுக்கு இயற்கையான மாதவிலக்கு உபாதை காரணமாகவும் குழந்தைப்பேறு, குழந்தைப் பராமரிப்பு காரணமாகவும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் பல இடைஞ்சல்களை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது. இதனால் பெண்கள் வெளியில் செல்லும் சந்தர்ப்பங்களைத் தவிர்க்க வேண்டியேற்பட்டது. அத்துடன் வீட்டில் உறைவிடங்களில் தங்கும் நிலையும் ஏற்பட்டது. இதன் காரணமாக ஆண்கள் வெளியில் செல்பவர்களாகவும் உணவளிக்க வேண்டியவாகளாகவும் ஆகினர். இந்நிலைமை காரணமாக ஆண்கள் சமூகக் குழுவில் உயர் அந்தஸ்துடைய நிலைமையைப் பெறத் தொடங்கினர்.

அத்துடன் ஆண்களுக்கு வெளியில் செல்லும் சந்தர்ப்பமும் கிடைத்தது. இதனால் அவர்கலளுக்கு ஏனைய ஆண்களுடன் அனுபவங்களையும் அறிவையும் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக்களும் கிட்டின. இது அறிவை விருத்தி செய்து கொள்ளவும் வழிவகுத்தது. அதேவேளை பெண்கள் வீட்டில் தங்குபவர்களாகவும், உணவு சேமிப்பு, பாதுகாப்பு, பதனிடல் போன்றவற்றில் உதவுபவர்களாகவும் இருந்து குழந்தை பெறுதல், பராமரித்தல், வீட்டு முகாமை போன்றதிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். இதன் காரணமாக பெண்களுக்கு பொது (சமூக, அரசியல், பொருளாதார) அறிவு குறைவாகக் கிடைத்தது.




இவ்வாறான நிலைமை பெண்களைத் தங்கி வாழ்பவர்களாகவும் ஆண்களை பராமரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டுபவர்களாகவும் ஆக்கிற்று. அதாவது பெண்களை பொருளாதார ரீதியாகவும், பாதுகாப்பு ரீதியாகவும் ஆண்களில் தங்க வேண்டிய வர்களாக்கிற்று. அத்துடன் நுண்ணறிவு வளர்ச்சிக்கு இடமின்மையால் அனுபவ அறிவுக்குறைவு காரணமாக திறமையான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் ஆண்களில் தங்குபவர்களாகவும் மாறினர். இந்நிலைமையே பெண்களுக்கு சமூக ரீதியாக கீழ்நிலை அந்நஸ்து உருவாகக் காரணமாயிற்று.

இக்கருத்தாக்கம் மேல்நிலை அந்தஸ்து பெற்ற குழுவினர்க்கு சாதகமாக அமைந்ததால் அவர்கள் இதனை சட்டபூர்வமாக்க நியதிகளையும் நியமங்களையும் உருவாக்கி, அதன் மூலம் இவற்றினை நிலைப்படுத்தவும் முனைந்தனர். பாலியல் ரீதியான உடலமைப்புக் காரணமாக பெண்கள் பிற ஆண்களிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்ற நிலையை உருவாக்கினர். அத்துடன் பெண்கள் உடலமைப்பும், அவர்களது இனப்பெருக்கத் தொழிற்பாடும் கூட கீழ்நிலை அந்தஸ்துக்குரிய அம்சங்களாக கணிப்புக் பெற்றன. அத்தடன் பாலியல் நுகர்ச்சிக்குரிய பண்டமாகவும் பெண்கள் உருவமைக்கப்பட்டனர்.

ஆயினும் சமூக மாற்றம் நாளடைவில் சமூக வாழ்வின் பல்வேறு துறைகளிலும் மனிதக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரினதும் முழுமையான பங்குபற்றுதலையும், பங்களிப்பையும் வேண்டிநின்றது. இதன் காரணமாக பெண்கள் சகல சமூக அபிவிருத்தித் துறைகளிலும் ஈடுபட ஆரம்பித்தனர். கல்வி கற்றல், ஊதியம், தரும் உழைப்பு வேலைகளில் ஈடுபடல், ஏனைய சமூக அபிவிருத்தி வேலைகளில் பங்குபற்றுதல், முன்னெடுத்துச் செல்லுதல் போன்றன இவற்றில் முக்கியமானவை.

இவ்வாறான வளர்ச்சிப் போக்கில் பெண்கள் ஆண்களுடன் சரிசமமாக இணைந்து செல்லும் நிலை மீண்டும் இடம் பெறத் தொடங்கியது. இடைக் காலத்தில் ஏற்பட்ட பின்தங்கல் நிலையில், உருவாக்கப்பட்ட கருத்தாக்கங்களையும், நியமங்களையும் அதன் காரணமாக நன்மையடைந்த குழுவினர், மீண்டும் வலியுறுத்ததத் தொடங்கினர். பெண்களின் புதிய சமூக நிலை ஆண் முதன்மை ஆண்/ மேலாதிக்க. சமூக அமைப்புக்கு பெரும் சவாலாக மாறியது.



அதேவேளை பெண்களின் புதிய சமூக நிலை அவர்களுக்கு பல்வேறு மேலதிக சுமைகளையும் கடமைக் கூறுகளையும் உருவாக்கிற்று. பெண்களுக்கு இயற்கையான விஷேடமான குழந்தை பெறும் தாய்மையுடன் வீட்டுப் பராமரிப்பு, குழந்தைகள், முதியோர், நோயாளிகள் பராமரிப்பு, வீட்டுச்சமையல் போன்ற வேலைகளும் தொடர்ந்தும் பெண்களுக்கே சுமத்தப்படுகின்றன. அத்துடன் புதிய சமூக தொழில் நிலைகளால் ஏற்படும் சுமைகளும் உண்டு. இவ்வாறான நிபந்தனைகள் பெண்களுக்கு பல வேலைப் பழுவை ஏற்படுத்துகின்றன. எனவே தற்கால நிலையில் அதாவது பெண்களின் தற்போதைய சமூக நிலையில் ஏற்கனவே உருவமைக்கப்பட்ட கருத்துக்கள் எந்தளவுக்கு பொருத்தப்பட்டுடையன? அல்லது அவை சமூக நீதிக்கு அமைவானவையா? அல்லது விஞ்ஞான ரீதியாக உண்மையானவையா? அல்லது மனித உரிமைக்கு மறுப்பானவையா? என்பன பற்றிய பிரக்ஞை இல்லாமலேயே இவை எடுத்தாளப்படுவது பற்றி நோக்குதல் அவசியமானதாகும்.

பெண்களை கீழ்நிலைப்படுத்திக் கூறும் சமூக, நியமங்களையும் நியதிகளையும் இரண்டு வகையாக பிரிக்கலாம்.

1. தனியாளுடன் தொடர்பானவை.
2. சமூக அம்சங்கள் / நடத்தைகளுடன் தொடர்பானவை.

### (1) தனியாளுடன் தொடர்பானவை:-

**1.1 உடலமைப்பு ரீதியாக கீழ்நிலை அந்தஸ்துடையவள் என்ற கருத்தினைப் பிரதிபலிக்கும் சில உதாரணங்கள்.**

1. பெண் புத்தி பின் புத்தி.
2. பெண்கள் தூய்மையற்றவர்கள்.
3. தொடக்கு தூரத்திருத்தல்
4. ஒரு பெண்ணை சிந்திக்க வைப்பதைவிட நடமாட வைப்பது இலகு.
5. கப்பலுக்கும் பெண்ணுக்கும் எந்த நேரமும் கோளாறு வந்து கொண்டேயிருக்கும்.

மேற்குறிப்பிட்டுள்ள கூற்றுக்களில் பெண்களுக்கு மூளையும் புத்தி சாலித்தனமும் குறைவானது. அதனால் அவர்கள் கீழ்நிலை அந்தஸ்துக்குரியவர்கள் என்றும் பெண்களின் உடற்றொழிற்பாடு குறைவான அம்சமாகவும், அதன் காரணமான உபாதைகள் கிண்டலுக்கும் புறக்கணிப்புக்கும் உரிய அம்சமாகவும் எடுத்துக் கூறப்படுகின்றது.

விஞ்ஞான ரீதியாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து, ஒருவரது நுண்ணறிவு, அவரது உளநிலைத்திறன், ஆற்றல் ஆகியன ஆண் பெண் பால்நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருக்கவில்லை எனத் தெரியவருகின்றது. அத்துடன் ஒரு பால் அங்கத்தவர்களிடையே காணப்படும் வேறுபாட்டைப் போன்றே இருபால் அங்கத்தவர்களிடையே காணப்படும் வேறுபாடும் இயல்பானதே என்றும் இவ்வாய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

உண்மை இவ்வாறு இருக்க இப்பொய்மைகளை மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பதிலுள்ள உள்நோக்கம் என்ன என ஆய்வு செய்தல் வேண்டும். தற்கால நிலையில் பெண்கள் எல்லாத் துறைகளிலும் ஈடுபடுகின்றனர். இதனால் கற்றல், வேலைவாய்ப்பு, வளங்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றில் போட்டி நிலைமை காணப்படுகின்றது.

எனவே போட்டியில் பெண்களைப் பின்னடையச் செய்வதற்கான ஓர் இலகுவான கருவியாக இவ்வாறான கூற்றுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனை பெண்களே உள்வாங்கி தாமாகவே பின்னடையும் சந்தர்ப்பங்களும் உண்டு. இதுவே பாரதூரமான விளைவுங் கூட.

புத்திக்குறைவு, உடற்பலக்குறைவு, நோய் நிலைமை என்பன கிண்டலாகவும் அதேவேளை "பெண்களால் எல்லாவற்றுக்கும் முடியாது" என்ற நிலையை ஏற்படுத்துவதற்காகவும் பயன் படுத்தப்படுகின்றன. என்பதே இதன் தெளிவான உண்மையாகும்.

**1.2 பொருளாதார ரீதியாக கீழ்நிலை அந்தஸ்துக்குரியவள் என்பதைக் காட்டும் கருத்தாக்கங்கள்.**

1. குடும்பத்தின் தலைமை உழைப்பாளி ஆண், பெண்ணின் உழைப்பு துணையானது.
2. பெட்டைக்கோழி கூவி பொழுது விடியாது.

பெண்கள் சரிசமமான உழைப்பாளிகளாக உள்ள இந்தக்கால கட்டத்திலும் கூட அவர்களது உழைப்பு 2ஆம் தரமான அல்லது துணையுழைப்பாகவே நோக்கப்படுகின்றது. மேலும் பெண் உழைத்தாலும் அது குடும்பத்தைக் கொண்டு செல்ல உதவாது. அதன் பயன்பாடு குறைவானது என்பதும் மேற்கூறிய கருத்துக்களால் வலியுறுத்தப்படுகின்றன.

யதார்த்த நிலைமையை நோக்கும்போது ஆரம்ப காலங்களில் பெண்கள் பொருளாதார ரீதியாக ஆண்களில் தங்கி வாழ்ந்துள்ளனர். எனினும் சமூக மாற்றம் காரணமாக இந் நிலைமை மாற்றமடைந்து வருகின்றது. எனினும் ஆண் முதன்மைப் போக்கினையும் பொருளாதாரத்தைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காகவும், இக்கூற்றுக்கள் மீள வலியுறுத்தப்படுகின்றன. பொருளாதார ரீதியாக கீழ்நிலை அந்தஸ்து ஒன்றை வழங்குவதன் மூலம், பொருளாதார சொத்துக்கள் மீதான கட்டுப்பாட்டினை பெண்களுக்கு இல்லாமல் செய்வதும், அதுபற்றிய தீர்மானங்கள் மேற்கொள்ளும் வாய்ப்புக்களை இல்லாமல் செய்வதும் இதன் மற்றைய பரிமாணங்களாகும்.


**1.3. பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் (பாலியல் ரீதியாக) என்பதை கூறும் சமூகக் கருத்தாக்கங்கள்.**

1. இளமையில் தந்தையாலும், பருவகாலத்தில் கணவனாலும், முதுமையில் மைந்தர்களாலும் காக்கப்பட வேண்டியவர்கள். ஆதலால் பெண்கள் எக்காலத்திலும் சுதந்திரமாக நடப்பதற்கு இயலாதவர்கள்.

2. பொம்பள சிரிச்சா போச்சு, போயில விரிச்சாப்போச்சு.

பெண்கள் பலவீனமானவர்கள், அதனால் மற்றையவர்களிடமிருந்த பாதுகாக்கப்பட வேண்டியவர்கள், அவர்களின் பாலியல் அம்சங்கள் காரணமாக மற்றைய ஆண்களிடம் இருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்ற கருத்துக்களை மேற்குறிப்பிடப்படும் கூற்றுக்கள் எடுத்துக் கூறுகின்றன.

உண்மையில் ஆண்களிடமிருந்து பெண்கள் பாலியல் ரீதியாக பாதுகாக்கப்பட வேண்டியவர்களாயின் பலவீனமானவர்கள் பெண்களா? எனவே பலப்படுத்தப்பட வேண்டியவர்கள் அல்லது கட்டுப்படுத்தப்பட வேண்டியவர்கள் யார்? எனினும் பெண்களின் பாலியல் அம்சம் பலவீனர்களால் பயன்படுத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக பாதுகாப்பு என்ற அம்சத்தின் தேவை எழுமாயின் இது இயல்பானதுதான். எனினும் பாதுகாப்பு வழங்குதல் என்ற அம்சத்தைப் பயன்படுத்தி பெண்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளும் அடிமையாகவும் வைத்திருக்கும் நிலை உருவாக்கப்படுதல் இந்த கூற்றுக்களின் பயங்கர விளைவாகவுள்ளது. அந்நிலை மனுநீதியும் சமூக நீதியுமற்ற ஈனச் செயலாகும். அத்துடன் இந்நிலைமையைப் பயன்படுத்தி பெண்கள் கீழ்நிலை அந்தஸ்துக்குரியவர்களாக்கப்படுவது இன்னும் வெறுப்புக்குரிய அம்சமல்லவா?



பெட்டைக்கோழிக் கூவி
பொழுது விடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.4 கருத்து ரீதியாக கீழ்நிலை அந்தஸ்துக்குரியவர்கள் என்ற கருத்தை பிரதிபலிக்கும் கூற்றுக்கள்.**

1. பெண்டிர்க்கழகு பேசாதிருத்தல்.
2. பெண்களுக்கு பெருமை உண்டாக்குவது புருஷர்களின் அபிப்பிராயங்கள் தான்.
3. ஒரு பெண்ணைச் சிந்திக்க வைப்பதை விட நடமாட வைப்பது இலகு.

பொதுவாக இவை பெண்கள் நுண்ணறிவு குறைவானவர்கள் என்ற கருத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவையாகும். அதன் காரணமாக புத்திபூர்வமாக சிந்திக்கவோ அல்லது திறமையான தீர்மானங்களை எடுக்கவோ முடியாதவர்கள் என்று இதற்கு விளக்கம் கூறப்படுகின்றது. முன்பு இதே கட்டுரையில் குறிப்பிட்டது போல் இதில் எந்த உடலியல், உளவியல் தொழிற்பாட்டு ரீதியான உண்மையும் இல்லை என்பது தெளிவு. அதேபோல் இக்கூற்றுக்களின் பின்விளைவுகளும் முன்னர் குறிப்பிட்டதை ஒத்ததே. அதாவது தீர்மானம் மேற்கொள்ளும், நிறைவேறும் அதிகாரம் கொண்ட அந்தஸ்து நிலையிலிருந்து கீழ்நிலைப் படுத்துவதற்காகவே இது எடுத்துரைக் கப்படுகின்றது. அத்துடன் பெண்களின் நுண்ணறிவை குறைத்து மதிப்பிடுவதோடல்லாது, அவர்களின் நுண்ணறிவின் உச்சப்பயன்பாட்டு உரிமையையும் இது மறுக்கின்றது. என்பதையும் நாம் உணர வேண்டும்.

**1.5 குணாம்சங்கள் தொடர்பாக கீழ்நிலை அந்தஸ்துக்குரியவர்கள் என்பதைக் காட்டும் கூற்றுக்கள்.**

1. இரு பெண்கள் ஒன்று கூடினால் அங்கு இன்னொரு பெண் இழித்துரைக்கப்படுவாள்.
2. பெண்கள் கணவனின் பர்சில் தான் ஆட்சி செய்கின்றனர்.
3. புகழ்ச்சியைக் கேட்டதும் தயங்குவது பெண்ணின் பலவீனம்.
4. பெண் இருக்கும் இடத்தில் பேச்சு இருக்கும், வாத்து இருக்கும் இடத்தில் கொக்கரிப்பு இருக்கும்.
5. பெருமையுள்ள பெண்ணின் ஒரு பாதி அகங்காரம். மறுபாதி சிறுமை.
6. பெண்ணால் மறக்க முடியாது அவள் அறியாததை மட்டும் தான்.
7. பெண் ஒரு புதுமை. தேவையின்றித் திறந்தால் தன்னை மட்டுமன்றி உலகையே அழித்துவிடும்.
8. பெண் தீமை செய்வதில் ஆண்களைவிட அறிவாளி.
9. கண்களே பெண்களை நம்பாதே.
10. பெண் ஒரு சந்தேகப்பிராணி.
11. உறுதியான செருப்பு வேண்டுமானால் பெண்ணின் நாக்கினை அடித்தோலாகக் கொண்டு தைக்க வேண்டும்.

கேவலமான கீழ்த்தரமான உணர்வுகள், இயல்புகள், பண்புகள், அம்சங்கள், பெண்ணுக்குரிய இலட்சணங்களாவே பொதுவாக சித்திரிக்கப்படுவதை மேற்காட்டிய கூற்றுக்கள் நமக்குக் காட்டுகின்றன. இவ்வாறு கூறப்படுவதன் மூலம் பெண்களின் அந்தஸ்து கீழ்நிலைப்படுத்தப்படுவதை நாம் உணரமுடியும். எல்லா மனிதர்களும் இயற்கையில் எல்லா வகையாக இயல்பாக்கங்களையும், உணர்வு களையும், பண்புகளையும் கொண்டுள்ளனர். உயிரியல் ரீதியாக எந்த இயல்பாக்கங்களும், உணர்வுகளும் பெண்களுக்கு என்றோ ஆண்களுக்கு என்றோ பிரிக்கப்பட்டில்லை. இவை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான அம்சங்களேயாகும். எனினும் இவை காணப்படும் விகிதம் மனிதனுக்கு மனிதன் வேறுபடும். இது ஆண் பாலாருக்கும் பெண் பாலாருக்கும் பொருந்தும். எனவே இழிவான இம்சங்கள் பெண்களுக்குரியதாக காட்டப்படுவது கீழ் நிலைப்படுத்துதலின் மற்றொரு பரிமாணமாகும்.

இக்கூற்றுக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறித்த மனிதர்கள் தொடர்பாகக் கூறப்பட்டவையாக இருக்கக்கூடும். குணாம்சங்கள் உணர்வுகளுடன் கூடிய விடயங்களாதலால் சந்தர்ப்பங்களுடன் மிக நெருங்கிய தொடர்புடையன. அவற்றினை எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும், எல்லாப் பெண்களுக்கும் பொதுமைப்படுத்துதல் புத்திபூர்வமான ஓர் சமூகத்திற்குப் பொருத்தமானதல்ல.



இரண்டு பெண் கூடினால் மற்றொரு பெண் இழித்துரைக்கப்படுவாள்.

**1.6 பாலியல் அம்சம் தொடர்பாக கீழ்நிலை அந்தஸ்தைக் காட்டும் கூற்றுக்கள்.**

1. ஆத்திரம் என்பது பெண்களுக்கெல்லாம் அடுப்படி வரைதானே ஓர் ஆதிக்க நாயகன் வந்தால் அடங்குதல் முறை தானே.

2. ஆண் கெட்டால் சம்பவம் பெண்கெட்டால் சரித்திரம்.

3. கோடி ஒரு வெள்ளைக்கு குமரி ஒரு பிள்ளைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் உணர்வுகளும், ஊக்கங்களும் இயல்பானதும், இருபாலாருக்கும் பொது வானதுமாகும். இது உயிரியல் ரீதியான உண்மையாகும். எனினும் பெண்ணின் உடலமைப்பு கருவைத்தாங்கி வளர்க்கும் தன்மையைக் கொண்டிருப்பதால், அவர்களது பாலியல் வெளிப்பாட்டுக்கு அது சாட்சியாகி விடுகின்றது. இவ்வாறான நிலையில்லாததால் சம்பவம் உண்மையானாலும் கூட, மறைக்கக்கூடிய ஓர் வாய்ப்பு ஆண்களுக்கு இருப்பதால் சமூக நோக்கில் (கூற்று – 2) ஆணுக்கு இது புறக் கணிக்கவே முடியாத ஓர் முக்கியத்துவத்தையும் கொடுகின்றது.

ஆனால் உண்மையைத் தெளிவான சிந்தனையுடன் நோக்கும் போது இருவர் தொடர்பாகவும் குறிப்பிட்ட சம்பவம் சம அளவு கணிப்பிற்குரியது தான். உண்மையை மறைக்கக்கூடியதாக இருப்பது ஆணுக்கு மேல் நிலை அந்தஸ்த்தையும், மறைக்க முடியாமல் இருப்பது பெண்களுக்கு கீழ்நிலை அந்தஸ்த்தையையும் கொடுப்பதாக இக்கூற்றுக்கள் காட்டுகின்றன. அதாவது ஒரே குறிப்பிட்ட விடயம் பெண்ணுக்கு வாழ்கை முழுவதையும் தீர்மானிக்கும் ஓர் அம்சமாகவும் ஆணுக்கு கருத்திற் கொள்ளவே தேவையற்ற விடயமாகவும் கொள்ளப்படுவது, (கூற்று – 2) சமூக நீதியின் பாற்பட்ட அம்சமாக இருக்கமுடியாதல்லவா?

இவ்வாறு கருவைச் சுமக்கும் பெண்ணின் தன்மை ஒரு கீழ்நிலை அந்தஸ்த்துக்குரிய தாக்கப்படுவது மனிதனை உருவாக்கும் அவளது ஆக்கசக்திக்கும் சவாலாக அமைகின்றது. அதனையே ஓர் பலவீனமாகவும் கருதி உற்பத்தியின் பின்னர் இயந்திரங்களை புறத்தொதுக்குவதும் (கூற்று – 3) இங்கு கவனிக் கத்தக்கது சமூக நீதியையும் உயிரில் உண்மைகளையும் கருத்திற் கொள்ளும் புத்தி ஜீவிகள் இக்கருத்துக்களுக்கு உடன்பாடாக இருக்க முடியுமா?

## (2) சமூக அம்சங்கள் / நடத்தைகளுடன் தொடர்பானவை

### 2.1 சமூக ரீதியாக கீழ்நிலை அந்தஸ்த்து என்பதை குறிக்கும் சமூகக் கூற்றுக்கள்.

1. விதவைகள் - சுப மங்களங்களுக்கு தீய சகுனம். பாவப்பட்ட ஜென்மம் பெண் செத்தால் புருஷன் புது மாப்பிள்ளை,
2. ஆணுக்கு உலகமெல்லாம் வீடு, பெண்ணுக்கு வீடு தான் உலகம்,
3. இவ்வுலகில் பெண்கள் செய்ய வேண்டுவனவெல்லாம் ஒரு மகள், ஒரு சகோதரி, ஒரு மனைவி, ஒரு தாய் என்ற நான்கு நிலைகளிலும் உள்ள கடமைகள் தான்.
4. நம் பெண்கள் உயர்ந்த படிப்பாலும் மேன்மையான உத்தியோகத்தாலும் மதிப்புடன் விளங்கினாலும் அவர்கள் பெண்களுக்குரிய பண்பாட்டினை எப்போதும் மறக்கக் கூடாது.
5. அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பு எதுக்கு.
6. ஆணுக்கு அடங்கி நடப்பதே பெண்ணுக்கு அழகு.

மேற்கூறிய கூற்றுகள் யாவும் வீடு, சமூகம் தொடர்பாக பெண்களுக்கு சமூகத்தினால் வழங்கப்பட்டுள்ள இரண்டாந்தர அந்தஸ்த்து டையவள் தான்: அந்நிலை சமூகத்தின் சகல அம்சங்களிலும் பிரதிபலிக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலேயே எல்லாக் கூற்றுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

உண்மையை நோக்கும்போது பெண்கள் ஆண்களுடன் சமமான ஆற்றல்களையும் சம உடலியல் பெறுமானங்களையும் கொண்டிருப் பதால் இக்கூற்றுக்கள் காலத்தால் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியனவாகும்.

பெண்களுக்கு இவ்வாறான கீழ்நிலை அந்தஸ்தினை மீள வலியுறுத்துவதற்கான உள்நோக்கம் முதலாளித்துவ சமூக அமைப்பில் ஆட்சியாளர்களின் மேலாதிக்க போக்கின் அதே தன்மைகளையே கொண்டிருக்கின்றது. அதாவது பெண்களின் உழைப்பு சக்தியை கட்டுப்படுத்தும் உரிமையை கொண்டிருத்தல், பெண்களின் நடமாட்டம் மீதான மேலாதிக்கம், சொத்துக்களிலும், ஏனைய பொருளாதார வளங்களிலும் உள்ள உரிமைகளிலும் கட்டுப்படுத்துதல். பெண்களின் இன பெருக்கமும், பாலியல் அம்சங்களுடன் தொடர்பான செயற்பாடுகளையும் கட்டுப் படுத்தும் உரிமையை கொண்டிருத்தல் போன்ற தந்தை வழி சமூக அமைப்பொன்றின் சித்தாந்தங்களின் தன்மைகள் பெண்ணிற்கு பல்வேறு விடயங்கள் தொடர்பாக கீழ்நிலை அந்தஸ்து வழங்கப்படுவதை உறுதி படுத்துகின்றன இதனை மேலாதிக்க சமூக அமைப்பின் போக்குடன் ஒப்பு நோக்க முடியும்.

நன்றி
முஸ்லிம் பெண்கள் ஆராச்சி நிலையம்
கட்டவிழும் முடிச்சிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிச்சோலை

### கொடுமை

பல பெண்கள்
வரதட்சணை
கொடுமையினால்
பூப்பெய்யாதுள்ளனர்.

### சமூகம்

வெறும் வாய் மெல்லும்
வீணர் - தினம்
ஒரு மாப்பிள்ளையை
கற்பனையிலேயே
கல்யாணம் செய்து
வைத்தனர்
மேளதாளத்துடன்
பூவையும் பொட்டையும்
இழந்த விதவைக்கு!

### வாழ்வு உயரும்

வீணான சந்தேகம்
விபரீதத்தை ஏற்படுத்தும்
விதண்டாவாதம்
விரிசலை வளர்க்கும் - கவரி
மானொத்த வாழ்க்கை
மாண்பினை உயர்த்தும்
மாசற்ற பெண்ணாள்
குடும்பவாழ்வும் வளம் பெறும்

### முதிர் கன்னி

நெற்றி பொட்டையும்
பூவையும்
என்றும் நிரந்தரமாக்கி
கொண்ட அதிஷ்டசாலிகள்

### பெண்ணின் பெருமை

பூமியில் பெண்ணாய்
பிறந்து
பொறுமையில் பூமியை
மிஞ்சும் தாயாய்
குழந்தைக்கு அன்னையாய்
பெண்ணின் பெறுமையை
என்னென்பது?
ஆணையும் பெற்றவள்
பெண்ணென்ற உணர்வுடன்
பெண்ணில்லையேல்
ஆணில்லை
என்று சொல்ல வைத்த
சிகரமானவளை எப்படி
அழைப்பதம்மா?

### பெண்ணே

சந்தர்ப்பங்களின்
சர்வாதிகார மிரட்டல்களால்
அடிமைச் சாகரமேறி
ஆயிரம் மைல்களுக்கப்பால்
வறுமைப் பேயை விரட்ட
வந்துவிட்டேன்
பாசத்தின் படை எடுப்புக்களாய்,
சுவாசத்தில் நின்ற
உனது அன்பு
உள்ளத்துள்! பொறுத்து
உருத்திர தாண்டவம்
ஆடுகிறது.
மூவாயிரம்
மைல்களுக்காப்பாலுள்ள – உன்
முகம் பார்க்க
முகிலைத் தூது விட்டேன்.
முகவரி தொலைந்து
நிற்கிறதாம்...... நான்
பௌர்ணமியாகிப் பரிணமித்தேன்
உன் முகம் கூட
முகிலுக்குள் முடங்கியதேனோ?
என் இனிய தோழி இன்னுமா
உனக்கு விடியவில்லை?
விடியலுக்காய் - நீ
காத்திருப்பாயானால் - அது
உன் அறியாமையை
அறிவிக்கிறது. தோழி....
சமுதாயத்தின் மூச்சு
பனிப்படலாமாய் - உன்னை
நடுங்க வைக்கிறது.
விடியலுக்கு ஏங்கும்
குயில் போல்.....




தோழி .... உன் அம்மா
சராசரிக் கனவுகளோட
அடைகாப்பாள் - உன் அப்பா
சம்பிரதாயக் கூண்டுக்குள்
அடைத்து வைப்பார் – அண்ணா
உன் உழைப்பால் சுகம் காண்பார் -
இவர்கள் மரபு மூலம் கற்றதை
உன் மூலம் கடத்துவார்கள்.

தோழி இன்னுமா உனக்கு
விடியல் இல்லை?
சூரியன் உதிப்பதும் மறைவதும்
இரவு பகலுக்காய் மட்டமல்ல.
கூட்டுப்புழுவாய்
இருக்கும் - நீ சுதந்திரக் காற்றை
சுவாசிக்கும் முன்பே காணாமல்
போய்விடாதே

வா... தோழி வா! – உன்
இறந்த நாட்களை
மறந்து விடு - அல்லது.
இழந்த நாட்கள்
இறந்ததாகவேயிருக்கட்டும்.

தோழி! முடியாததாக எதுவுமில்லை
எல்லாமே முயற்சியில் தான்
வா..... தோழி....வா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கெதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச சாசனம் (சீடோ)

மகளிருக்கெதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பது குறித்த தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபை பொதுச்சபையால் 1979 டிசம்பர் 18ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் 1981 செப்டெம்பர் 3ஆம் திகதி ஒரு சர்வதேச உடன்படிக்கை வலுவை பெற்றது. இலங்கை இவ்வுடன்படிக்கையை 1981 ஒக்டோபர் 5ஆம் திகதி உறுதிசெய்தது.

மகளீர் அந்தஸ்து பற்றிய ஐக்கிய நாடுகள் ஆணையத்தின் 30 வருட உழைப்பின் பெறுபேறே இவ்வுடன்படிக்கையாகும்.

மகளீர் அந்தஸ்த்து பற்றி ஐ.நா ஆணையம் 1946 யில் இரு நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டது.

1. மகளீர் நிலைமைகளை கண்காணித்தல்,
2. மகளீர் உரிமைகளை மேம்படுத்தல்,

ஆண்களோடு ஒத்த சம உரிமை மகளீருக்கு மறுக்கப்படும் எல்லா விடயப்பரப்புகளையும் ஆணையத்தின் பணி வெளிச்சம் போட்டுக் காட்டியது. ஆணையத்தின் பணியின் பெறுபேறான அதி முக்கியத்துவம் வாய்ந்த விரிவான ஆணவம் சீடோ என்பதாகும்.

**சீடோவில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புரைகள் பின்வருமாறு**

**பகுதி - I**

**உறுப்புரை 1**

தற்போதைய இணக்க உடன்படிக்கையின் நோக்கங்களுக்காக "பெண்களுக்கு எதிரான பேதங்காட்டல்" எனும் தொடர் அரசியல் பொருளாதார, சமூக கலாசார அல்லது வேறேதேனும் பரப்பில் பெண்களால், அவர்களது திருமணஞ்சார் தகுநிலை எவ்வாறிருப்பினும் ஆண்களும் பெண்களும் சமன் என்ற அடிப்படையில் மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் அங்கிகரிக்கப்படுதல், அனுபவிக்கப்படுதல் அல்லது பிரயோகிக்கப் படுதலைப் பாதிக்கும் அல்லது வறிதாக்கும் விளைவினை அல்லது நோக்கத்தைக் கொண்டு பாலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்

ஏதேனும் வேறுபாடு காட்டுதல், விலக்குதல் அல்லது மட்டுப்படுத்துதல் என்பதைக் கருதும்.

**உறுப்புரை 2**

அரசுகளாம் கட்சிகள் பெண்களுக்கெதிரான பேதங்காட்டலை அதன் அனைத்து வடிவங்களிலும் கண்டித்து, பொருத்தமான சகல வழிகள் மூலமும் தாமதமின்றியும் பெண்களுக்கெதிரதன பேதங்காட்டலை ஒழிக்கும் கொள்கையொன்றை அனுசரித்துச் செல்வதற்கு இணங்கி, இந் நோக்கத்திற்காகப் பின்வரும் பொறுப்புகளை ஏற்றுள்ளன.

(அ) தமது தேசிய அரசியலமைப்புகளில் அல்லது பொருத்தமான பிற சட்டவாக்கங்களில் ஆண், பெண் சமத்தவ தத்துவம் இதுவரை சேர்த்துக் கொள்ளப்பட்டிராவிடின் அதனைச் சேர்த்துக் கொள்தலும் இத்தத்துவம் செயல்ரீதியில் உணர்ந்து கொள்ளப்படுவதைச் சட்டத்தி னூடாகவும் பிறபொருத்தமான வழிகளி னூடாகவும் உறுதிப்படுத்துதலும்,

(ஆ) பெண்களுக்கு எதிரான சகல பேதங்காட்டல் களையும் தடுப்பதற்கு பொருத்தமான விடத்து தடைவிதிப்புகள் உட்பட தகுந்த சட்ட நடவடிக்கைகளையும் பிற நடவடிக் கைகளையும் மேற்கொள்ளுதல்,

(இ) ஆண்களுடன் சம அடிப்படையில், பெண்களது உரிமைகளின் சட்டரீதியான பாதுகாப்பைத்தாபித்தலும் தகுதி வாய்ந்த தேசிய நியாயசபைகள், பிற பொது நிறுவனங்கள் என்பவற்றினூடாக பேதங் காட்டும் எச்செயலக்கும் எதிராக பெண்களின் பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பை உறுதிப்படுத்தலும்,

(ஈ) பெண்களுக்கு எதிரான ஏதேனும் பேதங்காட்டற் செயல் அல்லது பழக்கத்தில் ஈடுபடுவதிலிருந்து தம்மைத் தடுத்துக் கொள்தலும் இக்கடப்பாட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவாக பொது அதிகாரிகளும் நிறுவனங்களும் செயற்படுவதை உறுதிப்படுத்துதலும்,

(உ) எவரேனும் தனியாளினால் நிறுவகத்தினால் அல்லது தாளாண்மையினால் பெண்களுக் கெதிராக மேற்கொள்ளப்படும் பேதங் காட்டலை நீக்குவதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்தல்,

(ஊ) பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலைக் கொண்டமையும் தற்போதுள்ள சட்டங்கள், பிரமாணங்கள், வழமைகள், நடைமுறை ஒழுங்குகள் ஆகியவற்றை மாற்றிய மைப்பதற்கு அல்லது ஒழிப்பதற்கு சட்டவாக்கம் உட்பட பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்,

(எ) பெண்களுக்கெதிரான பேதங்காட்டலைக் கொண்டமையும் அனைத்துத் தேசிய தண்டனை எற்பாடுகளையும் செயலறச் செய்தல்,

**உறுப்புரை 3**

அரசுளாம் கட்சிகள் அனைத்துப் பரப்புகளிலும், குறிப்பாக அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரப் பரப்புகளில் ஆண்களுடன் சமத்துவ அடிப்படையில் மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் பிரயோகிப்பதற்கும் அனுபவிப்பதற்குமான உத்தரவாதத்தைப் பெண்களுக்கு வழங்கும் பொருட்டு, பெண்களின் முழு வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உறுதிப் படுத்துவதற்காக சட்டவாக்கம் உட்பட பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளும்.

**உறுப்புரை 4**

1. ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் உண்மைப்படியான சமத்துவத்தைத் துரிதப்படுத் துவதனை நோக்கமாகக் கொண்ட அரசுகளாம் கட்சிகளால் தற்காலிக சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் தற்போதைய இணக்க உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ளபடி பேதங்காட்டலாகக் கருதப்படமாட்டாது. ஆனால் எவ்வழியிலும் அதன் விளைவாக சமமற்ற அல்லது வேறான நியமங்கள் பேணப்படுதலை உரிமை விதியாக்க முடியாது. வாய்ப்பிலும் நடத்துமுறையிலும் சமத்துவ நோக்கங்கள் அடையப் பெற்றதும் இந் நடவடிக்கைகள் நிறுத்தப்படுதல் வேண்டும்.

2. தாய்மைப் பேற்றினைப் பாதுகாக்கும் நோக்குடன் அரசுகளாம் கட்சிகளால் தற்போதைய இணக்க உடன்படிக்கையில் அடங்கியிருக்கும் அந்நடவடிக்கைகள் உட்பட, சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள ப்படுதல் பேதங்காட்டலாகக் கருதப்பட மாட்டாது.

**உறுப்புரை 5**

அரசுகளாம் கட்சிகள் பின்வரும் நோக்கங்களுக்கப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளும்.

(அ) ஆண்கள், பெண்களுள் ஒரு பாலாரின் இழிவு அல்லது உயர்வு நிலைக் கருத்தின் மீது அமைந்ததன்றேல் ஆண்களுக்கும் பெண்களுக்குமான மாற்றமில்லாக் கடமைக் கூறுகள் பற்றி அமைந்த, தப்பெண்ணங்களையும் வழமையானதும் பிறவுமான அனைத்துச் செயல் முறைகளையும் நீக்கும் நோக்குடன் ஆண்களதும் பெண்களதும் சமூக, கலாசார நடத்தைக் கோலங்களை மாற்றியமைத்தல்.

(ஆ) குடும்பக் கல்வியானது சகல சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளின் நலனே ஆதிமுதலான கருத்து என்பது விளங்கிக் கொள்ளப்பட்டு ஒரு சமூகத் தொழிற்பாடாக தாய்மைப் பேறு பற்றிய தகுந்த விளக்கத்தையும் தமது குழந்தைகளின் வளர்த்தெடுப்பிலும் விருத்தியிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான பொறுப்பு உண்டு எனும் அங்கீகாரத்தையும் உள்ளடக்குவதை உறுதிசெய்தல்,

**உறுப்புரை 6**

அரசுகளாம் கட்சிகள் பெண்களிலான வணிகத்தின் சகல வடிவங்களையும் அத்துடன் பெண்கள் சார் விபசாரம் தன்னயப்படுத்தப்படுதலையும் அடக்கு வதற்காக சட்டவாக்கம் உட்பட பொருத்தமான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்.

## பகுதி – II

**உறுப்புரை 7**

அரசுகளாம் கட்சிகள் ஒரு நாட்டின் அரசியல், பொது வாழ்க்கையில் பெண்களுக்கு எதிராக பேதங்காட்டப்படுதலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதுடன் ஆண்களுடன் சமமான நியதிகளில் குறிப்பாக பின்வருவனவற்றுக்கான உரிமைகளைப் பெண்களுக்கு உறுதி செய்யும்.

(அ) அனைத்துத் தேர்தல்களிலும் பகிரங்க மக்கள் தீர்ப்பெடுத்தல்களிலும் வாக்களிப்பதற்கும் பகிரங்கமாகத் தெரிவு செய்யப்படும் எல்லாக் குழுக்களுக்குமான தேர்தலில் நிற்கத் தகுதியுடைய வராவதற்கும்,

(ஆ) அரசாங்கக் கொள்கையின் ஒழுங்கு முறைப்படுத்தலிலும் அதன் அமுலாக் கத்திலும் பங்கு பற்றுவதற்கும் அரசாங் கத்தின் அனைத்து மட்டங்களிலும், பகிரங்கப் பதவி வகிப்பதற்கும் பகிரங்கக் கடமைகள் சகலதையும் நிறைவேற்றுவதற்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) நாட்டின் பொது, அரசியல் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட அரசாங்கச் சார்பற்ற நிறுவகங்களிலும் சங்கங்களிலும் பங்கு பற்றுவதற்கும்,

> பண்பாடு என்பது வன்முறையாலயே மக்கள்மீது திணிக்கப்படுவது, பெண்களின் அடிமை நிலையைப் பண்பாடு அன்று வளர்த்து வருகிறது. பண்பாடு ரீதியான போராட்டங்கள் வலுபெற்றாமல் பெண்விடுதலை வளராது. பண்பாடு என்பது ஆணின் செல்வாக்கை வளர்ப்பதாக இருப்பதைக் தெரியாமலேயே இன்று பெண்கள் பலர் இருக்கின்றனர். அப்படி, ஒடுக்குமுறைக்கு ஆணாதிக்கப் பண்பாட்டை ஏற்க மறுப்பவரை, சமூகம் புறகணிப்பு செய்து வன்முறைக்கு உள்ளாக்குகிறது.
> (நன்றி தமிழகப் பெண்கள் விடுதலை இயக்கம்)

**உறுப்புரை 8**

அரசுகளாம் கட்சிகள் ஆண்களுடன் சமமான நியதிகளிலும் பேதங்காட்டல் எதுவுமின்றியும் பெண்கள் சர்வதேச மட்டத்தில் தமது அரசாங்கங்களைப் பிரதிநிதித்துவம் செய்து நிற்பதற்கும் சர்வதேச நிறுவகங்களின் வேலையில் பங்கு பற்றுவதற்குமான வாய்ப்பினை உறுதிச்செய்யும் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

**உறுப்புரை 9**

1. அரசுகளாம் கட்சிகள் பெண்களுக்கு அவர்கள் தமது தேசிய இனத்தைத் தேடிப்பெறுவதற்கு, மாற்றுவதற்றுக்கு. அன்றேல் நிறுத்தி வைத்திருப்பதற்கு ஆண்களுடன் சமமான உரிமைகளை வழங்கும். குறிப்பாக அவை அன்னியரொருவருடனான திருமணமோ, திருமண வாழ்வுக் காலத்தில் கணவன் தனது தேசிய இனத்தை மாற்றிக் கொள்வதோ, தானாக மனைவியின் தேசிய இனத்தை மாற்றவோ, அவரை நாடற்றவராகச் செய்யவோ, கணவனின் தேசிய இனத்தை அவர் மீது திணிக்கவோ மாட்டாது என்பதை உறுதி செய்யும்.
2. அரசுகளாம் கட்சிகள் பெண்களுக்கு அவர்களது பிள்ளைகளின் தேசிய இனம் தொடர்பில் ஆண்களுடன் சமமான உரிமைகளை வழங்கும்.

## பகுதி - III

**உறுப்புரை 10**

அரசுகளாம் கட்சிகள் கல்வி துறையில் பெண்களுக்கெதிரான பேதங்காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் ஆண்களுடன் பெண்களுக்கு சமமான உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும், குறிப்பாக ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்குமாக எடுத்துக் கொள்ளும்.

(அ) தொழிலுக்கும் தொழில் வழிகாட்டலுக்கும் கிராமப்புறப் பிரதேசங்களிலும் அவ்வாறே நகர்புறங்களிலும் அனைத்து வகைப்பட்ட கல்வித்தாபனங்களிலும் கல்விகற்கைகளுள் நுழைவதற்கும் சான்றிதழ்களுக்கான தகமை அடைவதற்கும் ஒரே நிபந்தனைகள்: இச்சமத்துவம் பாடசாலை புகுமுன் கல்வி, பொதுக்கல்வி, தொழிற்கல்வி, உயர் தொழிநுட்ப கல்வி என்பவற்றிலும் அத்துடன் அனைத்து வகையான தொழிற் பயிற்சிகளிலும் உறுதிப்படுத்தப்படும்.

(ஆ) ஒரே பாடவிதானம், ஒரே பரீட்சைகள், ஒரே தரமான தகைமைகளைக் கொண்ட கற்பித்தற் பணியாளர்கள், ஒரே பண்புத்தரம் வாய்ந்த பாடசாலைக் கட்டட வளவுகளும் உபகரணங்களும் என்பவற்றுக்கான வாய்ப்பு

(இ) கல்வியின் சகல மட்டங்களிலும் கல்வியின் அனைத்து வடிவங்களிலும் ஆண்களினதும் பெண்களினதும் கடமைக் கூறுகள் பற்றிய மாறாது நிலைபெற்ற ஏதேனும் எண்ணக்கருவை, ஆண், பெண் கூட்டுக் கல்வியும் கல்வியின் பிற வகைகளையும் ஊக்குவிப்பதன் மூலமும் குறிப்பாக பாடநூல்களையும் பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களையும் மீளவாய்தல் மூலமும் கற்பித்தல் முறைகளை இசைவாக்கம் செய்வதன் மூலமும் நீக்குதல்,

(ஈ) புலமைப் பரிசில்கள், கற்கைக்கான பிற கொடைகள் என்பவற்றின் மூலம் பயன்பெறுவதற்கும் ஒரே வாய்ப்புகள்,

(உ) முதிர்ந்தோர்க்கு ஆனவையும் தொழிற்பாட்டுப் படிப்பறிவு சார்ந்தவையுமான நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட, குறிப்பாக ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் கல்வியில் காணப்படும் ஏதேனும் இடைவெளியை இயன்றளவு மிக முற்பட்ட வேளையில் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட தொடரும் கல்விக்கான நிகழ்ச்சி திட்டங்களிற் பங்குபற்றுவதற்குச் சம வாய்ப்புகள்,

(ஊ) மாணவியர் பாடசாலையை விட்டு விலகும் வீதங்களைக் குறைத்தலும் உரிய காலத்திற்கு முன் பாடசாலையை விட்டு விலகிய பெண் பிள்ளைகளுக்கும் பெண்களுக்குமான நிகழ்ச்சி திட்டங்களை ஒழுங்கமைத்தலும்,

(எ) விளையாட்டிலும் உடற்கல்வியிலும் தீவிரமாகப் பங்குபற்றுவதற்கான ஒரே வாய்ப்புகள்,

(ஏ) குடும்பங்களின் உடனலத்தையும் நல் வாழ்வையும் உறுதிப்படுத்த உதவுவதற்கு குடும்பத்திட்டம் பற்றிய ஆலோசனையும் தகவல்களும் உட்பட தனிப்பட்ட கல்வித் தகவல்களைப் பெறுவதற்கான வாய்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உறுப்புரை 11**

1. அரசுகளாம் கட்சிகள், தொழிற் பரப்பில் பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் ஒரே உரிமைகளை குறிப்பாக பின்வருவனவற்றைப் பெண்களுக்கு உறுதிப் படுத்துவதற்காக எடுத்துக்கொள்ளும்.

(அ) அனைத்து மனிதர்களதும் பராதீனப் படுத்த முடியாத உரிமையாக வேலை செய்வதற்கான உரிமை,

(ஆ) தொழில் விடயங்களில் தெரிவுக்கான ஒரே கட்டளை விதிகளின் பிரயோகம் உட்பட ஒரே தொழில் வாய்ப்புகளுக்கான உரிமை,

(இ) உயர் தொழில், தொழில் ஆகியவற்றைச் சுதந்திரமாகத் தெரிவு செய்வதற்கான உரிமை, பதவி உயர்ச்சி, வேலைப் பாதுகாப்பு, சகல சேவை நலன்களும் நிபந்தனைகளும் என்பவற்றுக்கான உரிமை, தொழில்பயிலுநர் பயிற்சி, உயர் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி, மீண்டுவரும் பயிற்சி என்பவை உட்பட தொழிற் பயிற்சியையும் மீள்பயிற்சியையும் பெற்றுக் கொள்வதற்கான உரிமை,

(ஈ) சம நலன்கள் உட்பட சம ஊதியத்திற்கான உரிமையும் சம பெறுமானமுடைய வேலை தொடர்பில் சம நடத்துகைக்கான உரிமையும் அத்துடன் வேலையினது பண்புத்தர மதிப்பீட்டில் சமத்துவமான நடத்துகையும்,

(உ) ஓய்வுபெறல், தொழிலின்மை, சுகயீனம், நோய்வாய்ப்பட்ட நிலை, வயோதிபம் அத்துடன் வேலை செய்ய இயலாமை எனும் குறிப்பான சந்தர்ப்பங்களில் சமூக பாதுகாப்புக்கான உரிமையும் மேலும் வேதனத்துடன் லீவு பெறுவதற்கான உரிமையும்,

(ஊ) இனப்பெருக்கத் தொழிற்பாட்டைப் பாதுகாத்தல் உட்பட உடனலப் பாதுகாப்பிற்கும் வேலை நிலைமைகளில் இடர்காப்பிற்கான உரிமை,

2. விவாகம் அல்லது தாய்மைப் பேற்றின் அடிப்படையில் பெண்களுக்கெதிரான பேதங் காட்டலைத் தடுப்பதற்கும் வேலைசெய்வதற்கான பயனுறுதிவாய்ந்த உரிமையை உறுதிப்படுத்துவதற்குமாக அரசுகளாம் கட்சிகள் பின்வருவனவற்றுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்,

(அ) கர்ப்பநிலை அல்லது பிரசவ லீவு காரணமான வேலை நீக்கஞ் செய்தலையும் திருமணஞ்சார் நிலையின் அடிப்படையில் வேலை நீக்கத்தில் பேதங் காட்டப்படுதலையும் பிரமாணங்களை விதித்தலுடன் தடைசெய்தல்,

(ஆ) முன்னைய தொழில், சிரேட்ட நிலை அல்லது சமூகச் சலுகைகள் என்பவற்றின் இழப்பின்றி வேதனத்துடன் அல்லது ஒப்பிடத்தக்க சமூக நலன்களுடன் பிரசவ லீவை அறிமுகப்படுத்துதல்,

(இ) பெற்றோர் குடும்பக் கடப்பாடுகளை வேலைப் பொறுப்புகளுடன் இணைப்பதற்கும் பொதுவாழ்வில் பங்குபற்றுவதற்கும் உதவுவதற்கு அவசியமான சமூக சேவைகள் வழங்கப்படுதலை, குறிப்பாக குழந்தைக் கவனிப்பு வசதிகளின் வலையமைவொன்றைத் தாபித்து விருத்தி செய்வதனூடாக ஊக்கு வித்தல்,

(ஈ) கர்ப்பகாலத்தில் பெண்களுக்குத் தீங்கு பயப்பதாக நிறுவப்பட்ட வேலைவகைகளில், அவர்களுக்குச் சிறப்பான பாதுகாப்பை வழங்குதல்.

3. இவ்வுறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட விடங்கள் தொடர்பான பாதுகாப்புக்குரிய சட்டவாக்கம் காலத்துக்குக் காலம் விஞ்ஞான, தொழினுட்ப அறிவினடிப்படையில் மீளவாராயப்பட்டுத் திருத்தப்படலாம், நீக்கப்படலாம் அன்றேல் அவசியமாயின் விரிவுப்படுத்தலாம்.

**உறுப்புரை 12**

1. அரசுகளாம் கட்சிகள் உடனலக் கவனிப்புப் பரப்பிலே, பெண்களுக்கு எதிரான பேதங் காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் குடும்பத்திட்டமிடற் சேவைகள் உட்பட கவனிப்புச் சேவைகளைப் பெண்கள் பெற்றுப்கொள்வதை உறுதிப்படுத்து வதற்காக எடுத்துக் கொள்ளும்.

2. இவ்வுறுப்புரையின் பந்தி I இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அரசுகளாம் கட்சிகள் பெண்களுக்கு, கர்ப்பநிலை, பிரசவம்,, பிரசவத்திற்குப் பிற்பட்ட காலம் என்பவற்றுடன் தொடர்புபட்ட பொருத்தமான சேவைகளை, அவசியமான பொழுது இலவசச் சேவைகளையும் அத்தடன் கர்ப்ப காலத்தின் போதும் பால் சுரக்கும் காலத்திலும் போதுமான போசணையையும் வழங்கி உறுதிப்படுத்தும்.

**உறுப்புரை 13**

அரசுகளாம் கட்சிகள் சமூக பொருளாதார வாழ்வின் பிற பரப்புகளிலே, பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் ஒரே உரிமைகளை, குறிப்பாகப் பின்வருவனவற்றை அவர்களுக்கு உறுதிப்படுத்தும் பொருட்டு எடுத்துக் கொள்ளும்.

(அ) குடும்ப நலன்களுக்கான உரிமை

(ஆ) வங்கிக் கடன்களுக்கும் ஈடுகளுக்கும் நிதிக்கடனின் பிறவகைகளுக்குமான உரிமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) பொழுதுபோக்குச் செயற்பாடுகள், விளையாட்டு, கலாசார வாழ்க்கையின் சகல அம்சங்களும் என்பவற்றில் பங்குபற்றுவதற்கான உரிமை.

**உறுப்புரை 14**

1. அரசுகளாம் கட்சிகள், கிராமியப் பெண்கள் எதிர்நோக்கும் குறிப்பான பிரச்சினைகளையும் பொருளாதாரத்தின் பணமாகச் செலவிடப்படாத துறைகளிலான அவர்களது பணி உட்பட, தமது குடும்பத்தின் பொருளாதாரப் பிழைப்பில் கிராமியப் பெண்கள் வகிக்கும் குறிப்பிடத்தக்க கடமைக்கூறுகளையும் கருத்திற்கொண்டு, இவ்விணக்க உடன்படிக்கையின் ஏற்பாடுகள் கிராமப்புறப் பிரதேசங்களிலுள்ள பெண்களுக்குப் பிரயோகிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

2. அரசுகளாம் கட்சிகள் கிராமப்புறப் பிரதேசங்களில் பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும், ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் அவர்கள் கிராமிய அபிவிருத்தியில் பங்குபற்றி அதிலிருந்து நன்மையடைவதை உறுதிப்படுத்துவதற்காக பின்வருவனவற்றுக்கான உரிமையையும் உறுதிசெய்யும்.

(அ) அபிவிருத்தித் திட்டமிடலின் விரிவுபடுத்தலிலும் அமுலாக்கத்திலும் சகல மட்டங்களிலும் பங்குபற்றுதல்,

(ஆ) குடும்பத் திட்டமிடலில் தகவல்கள், அறிவுரை வழங்கல், சேவைகள் என்பவை உட்பட போதுமான உடனலக் கவனிப்பு வசதிகளுக்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளுதல்.

(இ) சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து நேரடியாகப் பயனடைதல்.

(ஈ) அவர்கள் தமது தொழினுட்பத் தேர்ச்சியை விருத்தி செய்வதற்காக தொழிற்பாட்டு எழுத்தறிவுடைமை, அத்துடன் பிறவற்றுள் அனைத்துச் சமுதாய, விரிவாக்கச் சேவைகளினதும் பயன் என்பவற்றுடன் தொடர்புபட்டவை உட்பட நியமமானதும் நியமமற்றதுமான அனைத்து வகையான பயிற்சியையும் கல்வியையும் பெற்றுக் கொள்ளுதல்.

(உ) தொழிலின் அல்லது சுயதொழிலினூடாக பொருளாதார வாய்ப்புகளை சமநிலையில் பெற்றுக்கொள்வதற்காக சுய உதவிக் குழுமங்களையும் கூட்டுறவு அமைப்புகளையும் ஒழுங்கமைப்புச் செய்தல்,

(ஊ) சமுதாயச் செற்பாடுகள் அனைத்திலும் பங்குபற்றல்,

(எ) விவசாயக் கொடுகடனும் கடன்களும், சந்தைப்படுத்துதல் வசதிகள், பொருத்தமான தொழில் நுணுக்கம் என்பவற்றைப் பெறுதற்கான வாய்ப்பும் காணி, கமநலச் சீர்திருத்தம் அத்தடன் காணி மீள்குடியேற்றத் திட்டங்கள் என்பவற்றில் சமமான நடத்துகையும்,

(ஏ) குறிப்பாக வீடமைப்பு, சுகாதாரம், மின்சாரம், நீர்வழங்கல், தொடர்பாடல் வசதிகள் என்பவை தொடர்பில் போதுமான வாழ்க்கை நிலைமைகளைத் துய்த்தல்.

## பகுதி – IV

**உறுப்புரை 15**

1. அரசுகளாம் கட்சிகள் பெண்களுக்குச் சட்டத்திற்கு எதிரே ஆண்களுடன் சமத்துவம் வழங்கும்.

2. அரசுகளாம் கட்சிகள் குடியியல் விவகாரங்களில், ஆண்களுக்குள்ளதற்குச் சர்வசமனான ஒரு சட்டத் தகுதியையும் அத்தகுதியைப் பிரயோகிப்பதற்கான அதே வாய்ப்புகளையும் பெண்களுக்கு வழங்கும். குறிப்பாக அவை, பெண்களுக்கு ஒப்பந்தங்களை முடிப்பதற்கும் சொத்துகளை நிர்வகிப்பதற்கும் சமமான உரிமைகளை வழங்கி நீதிமன்றங்களிலும் நியாய சபைகளிலும் நடைமுறைகளின் சகல கட்டங்களிலும் அவர்களைச் சமமாக நடத்தும்.

3. அரசுகளாம் கட்சிகள், பெண்களின் சட்டத்தகுதியை மட்டுப்படுத்துவதன்பால் நெறிப்படுத்தப்பட்ட சட்டவிளைவுடன் கூடிய, அனைத்து ஒப்பந்தங்களினதும் அனைத்துப் பிற தனியார் சாதனங்களினதும் எவ்வகையும், வெற்றும் வறிதுமானதாகக் (சட்டப்படி முற்றிலும் செல்லுபடியற்றதாகக்) கருதப் படுமென உடன்படுகின்றன.

4. அரசுகளாம் கட்சிகள் ஆட்களின் நகர்வுடனும் அவர்கள் தமது வதிவிடத்தையும் வாழ்விடத்தையும் தெரிவு செய்வதற்கான சுதந்திரத்தடன் சம்பந்தப்பட்ட சட்டம் தொடர்பில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே உரிமைகளை வழங்கும்.

**உறுப்புரை 16**

1. அரசுகளாம் கட்சிகள் விவாகத்துடனும் குடும்பத் தொடர்புகளுடனும் சம்பந்தப்பட்ட அனைத்து விவகாரங்களிலும் பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலை ஒழிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதுடன் குறிப்பாக ஆண் பெண் சமத்தவ அடிப்படையில் பின்வருவனவற்றை உறுதி செய்யும்.

(அ) திருமணத்தினுட் புகுவதற்கான ஒரே உரிமை

(ஆ) சுதந்திரமாக வாழ்க்கைத் துணையொருவரைத் தெரிவு செய்வதற்கும் தமது சுதந்திரமானதும் முழுமையானதுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதத்துடன் மட்டும் திருமணத்தினுட் புகுவதற்கான ஒரே உரிமை.

(இ) திருமண வாழ்வுக் காலத்திலும் அது கலைக்கப்படும் போதும் ஒரே உரிமைகளும் பொறுப்புக்களும்

(ஈ) அவர்களது திருமணஞ்சார் தகுநிலை எதுவாக இருப்பினும் அவர்களது பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பெற்றோர் எனும் முறையில் ஒரே உரிமைகளும் பொறுப்புகளும், சகல சந்தர்ப் பங்களிலும் பிள்ளைகளின் நலனே முதன்மை பெறும்.

(உ) தமது பிள்ளைகளின் எண்ணிக்கையையும் பிள்ளைகளுக்கிடையிலான கால இடை வெளியையும் சுயாதீனமாகவும் பொறுப்புடனும் தீர்மானிப்பதற்கும் இவ்வுரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அவர்களுக்கு உதவும் தகவல்கள், கல்வி, வழிவகைகள் என்பவற்றை எய்துவதற்கும் ஒரே உரிமைகள்.

(ஊ) பிள்ளைகளின் பாதுகாவல், கண்காணிப்பு, நம்பிக்கைப் பொறுப்பாண்மை, மகவேற்பு அல்லது தேசிய சட்டவாக்கத்தில் இவ்வெண்ணக் கருக்கள் நிலவும் ஒத்த நிறுவகங்கள் என்பவை தொடர்பில் ஒரே உரிமைகளும் பொறுப்புகளும், சகல சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளின் நலனே முதன்மை பெறும்.

(எ) குடும்ப பெயர், உயர்தொழில், தொழில் என்பவற்றைத் தெரிவு செய்வதற்கான உரிமை உட்பட, கணவனும் மனைவியும் எனும் முறையில் ஆள்சார் ஒரே உரிமைகள்.

(ஏ) தம்பதியர்கள் இருவருக்கும் சொத்தின் உடைமை, கொள்ளல், முகாமை, நிர்வாகம், துய்த்தல், கட்டணமின்றியோ பெறுமானமுடைய பிரதி பலனுக்கோ முடிவு செய்தல் என்பதை தொடர்பில் ஒரே உரிமைகள்.

2. பிள்ளைப்பருவ விவாக நிச்சயதார்த்தமும் விவாகமும் சட்டப் பயனைக் கொண்டிராது என்பதுடன் விவாகம் செய்வதற்கான இழிந்த வயதைக் குறித்துரைப்பதற்கும் அரசகருமப் பதிவகமொன்றிலே விவாகங்கள் பதிவு செய்யப்படுதலைக் கட்டாயமாக்குவதற்கும் சட்டவாக்கம் உட்பட, அவசியமான நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்படும்.

## பகுதி – V

**உறுப்புரை 17**

1. தற்போதைய இணக்கவுடன்படிக்கையைச் செயற்படுத்துவதில் எய்தப்படும் முன்னேற்றத்தைக் கருதுவதற்காக பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலை ஒழிப்பதற்கான குழுவொன்று, (இதன் பின்னர் குழுவெனக் குறிப்பிடப்படும்) இணக்க உடன்படிக்கை வலுவிற் புகும் வேளையில், இணக்க உடன்படிக்கையில் அடங்கும் பரப்பில் உயர் ஒழுக்கத் தகுநிலையையும், தகுதியையும் கொண்ட பதினெட்டு நிபுணர்களையும் அது வலுவாக்கம் செய்யப்பட்டதன் பின் அல்லது இணக்கவுடன்படிக்கைக்கு முப்பத்தைந்தாவது அரசாம் கட்சி சேர்க்கப்பட்டதன் பின் இருபத்து மூன்று நிபுணர்களையும் கொண்டதாகத் தாபிக்கப்படும். நிபுணர்கள் அரசுகளாம் கட்சிகளால் அவர்களது தேசிய இனத்தவர்களின் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்டு தமது சொந்த ஆற்றலின் பேரில் சேவையாற்றுவர். தெரிவில் முறையான புவியற் பரம்பலுக்கும் வேறுபட்ட நாகரிக வடிவங்களினதும் அத்தடன் பிரதான சட்ட முறைமைகளினதும் பிரதிநிதித்துவத்திற்கும் மதிப்புக் கொடுக்கப்படும்.

2. குழுவின் உறுப்பினர்கள், அரசுகளாம் கட்சிகளால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நபர்களின் பட்டியலொன்றிலிருந்து இரகசிய வாக்குச் சீட்டின் மூலம் தெரிவு செய்யப்படுவர். அரசுகளாம் கட்சி ஒவ்வொன்றும் தனது சொந்தத் தேசிய இனத்தவர்கள் மத்தியிலிருந்து நபரொருவரைப் பெயர் குறித்து நியமிக்க முடியும்

3. முதலாவது தேர்தல் தற்போதைய இணக்க உடன்படிக்கை வலுவினுட் புகுந்த தேதிக்கு ஆறுமாதங்களின் பின் நடத்தப்படும். தேர்தல் ஒவ்வொன்றுக்குமான தேதிக்கு குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு முன்பேனும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அரசுகளாம் கட்சிகளுக்கு, இரு மாதங்களுக்குள் அவர்களது பெயர் குறித்த நியமங்களைச் சமர்ப்பிக்கும்படி அழைப்பு விடுக்கும் கடிதமொன்றை முகவரியிட்டனுப்புவார். செயலாளர் நாயகம் அரசுகளாம் கட்சிகளுக்கு, இவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அனைத்து நபர்களினதும் நெடுங்கணக்கு எழுத்தொழுங்கிலமைந்த பெயர்பட்டியலொன்றை அவர்களைப் பெயர் குறித்து நியமித்த அரசுகளாம் கட்சிகளைக் குறிப்பிட்டுச் சமர்ப்பிப்பார்.

4. குழுவின் உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் செயலாளர் நாயகத்தினால் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் கூட்டப்படுகின்ற அரசுகளாம் கட்சிகளின் கூட்டமொன்றில் நடத்தப்படும். அரசுகளாம் கட்சிகளின் மூன்றில் இருபங்கு தாழ்வெண்ணிக்கையாக (Quorum) இருக்க வேண்டிய அக்கூட்டத்தில் குழுவிற்குத் தெரிவு செய்யப்படும் நபர்கள் மிகப் பெருமெண்ணிக்கையான வாக்களிக்கும் அரசுகளாம் கட்சிகளினது பிரதிநிதிகளின் பூரண பெரும்பான்மை வாக்குளையும் பெற்று நியமிக்கப்படுபவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. குழுவின் உறுப்பினர்கள் நான்கு ஆண்டுக் காலத்தில் தெரிவு செய்யப்படுவர். எனினும், முதலாவது தேர்தலின் போது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் ஒன்பது பேரின் கால எல்லை இரு ஆண்டுகளின் இறுதியில் முடிவடையும். முதலாவது தேர்தலின் உடன் பின்னதாக அந்த ஒன்பது உறுப்பினர்களினதும் பெயர்கள் குழுவின் தவிசாளரினால் திருவுளச்சீட்டின் மூலம் தெரிவு செய்யப்படும்.

6. குழுவின் மேலதிக ஐந்து உறுப்பினர்களின் தேர்தல் இந்த உறுப்புரையின் 2ஆம், 3ஆம், 4ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய முப்பத்தைந்தாவது வலுவாக்கத்தினை (முறையேற்பினை) அன்றேல் அரசின் சேர்வினைத் தொடர்ந்து நடத்தப்படும். இச் சந்தர்ப்பத்தில் தெரிவுசெய்யப்பட்ட மேலதிக உறுப்பினர்களுள் இருவரின் கால எல்லை இரு ஆண்டுகளின் இறுதியில் முடிவுறும். இந்த இரு உறுப்பினர்களினதும் பெயர்கள் குழுவின் தவிசாளரினால் திருவுளச் சீட்டின் மூலம் தெரிவு செய்யப்பட்டவையாகும்.

7. அமய வெற்றிடங்களை நிரப்புவதற்கு குழுவின் உறுப்பினராகத் தொழிற்படுத்தல் முடிவற்ற நிபுணரின் அரசாம் கட்சி தனது தேசிய இனத்தவர்களுள் இன்னுமொரு நிபுணரைக் குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட நியமிக்க முடியும்.

8. குழுவின் உறுப்பினர்கள், பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் குழுவினது பொறுப்புகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு சபை தீர்மானிக்கும் அந்நியதிகள், நிபந்தனைகள் மீது ஐக்கிய நாடுகளின் வளங்களிலிருந்து வரும்படிகளைப் பெற்றுக்கொள்வர்.

9. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் தற்போதைய இணக்க உடன்படிக்கையின் கீழ் குழுவின் தொழிற்பாடுகள் பயனுறுதி வாய்ந்த முறையில் நிறை வேற்றப்படுவதற்கு அவசியமான பணியாளர்களையும் வசதிகளையும் வழங்கும் ஏற்பாட்டினைச் செய்வார்.

**உறுப்புரை 18**

1. அரசுகளாம் கட்சிகள் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம், குழுவினால் ஆழ்ந்தாராயப்படுவதற்கென, தற்போதைய இணக்க உடன்படிக்கையின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தாம் மேற்கொண்டுள்ள சட்டவாக்க, நீதிமுறை, நிர்வாக அல்லது பிற நடவடிக்கைகள் பற்றியதும் இது தொடர்பில் எய்தப்பட்ட முன்னேற்றத்தைப் பற்றியதுமான அறிக்கையொன்றினைப் பின்வரும் கால எல்லைகளில் சமர்ப்பிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளும்.

(அ) சம்பந்தப்பட்ட அரசுக்கு, வலுவினுட் புகுந்த ஓராண்டுக்காலத்தினுள்:

(ஆ) அதன் பின்னர் குறைந்த பட்சம் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் மேலும் குழு வேண்டிக் கொள்ளும் அவ்வப்பொழுதுகளிலும்.

2. அறிக்கைகள், தற்போதைய இணக்க உடன்படிக்கையின் கீழ் கடப்பாடுகளின் நிறைவேற்றத்தினளவைப் பாதிக்கும் காரணிகளையும் இடர்ப்பாடுகளையும் எடுத்துக்காட்ட முடியும்.

**உறுப்புரை 19**

1. குழு தனது சொந்த நடைமுறை விதிகளைக் கைக்கொள்ள முடியும்.
2. குழு தனது உத்தியோகத்தர்களை ஈராண்டுக் காலத்திற்குத் தெரிவு செய்யும்.

**உறுப்புரை 20**

1. குழு ஒவ்வோராண்டும் இயல்பாக இரு வாரங்களுக்கு மேற்படாத காலத்திற்கு, தற்போதைய இணக்க உடன்படிக்கையின் 18 ஆம் உறுப்புரைக்கமையச் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை ஆழ்ந்தாரயும் பொருட்டுக் கூட முடியும்.

2. குழுவின் கூட்டங்கள் இயல்பாக ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் அன்றேல் குழுவினால் தீர்மானிக்கப்படும் வசதியான பிறிதோரிடத்தில் நடத்தப்படலாம்.

**உறுப்புரை 21**

1. குழு, பொருளாதார சமூக கழகத்தினூடாக ஒவ்வோராண்டும் தனது செயற்பாடுகள் பற்றி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக்கு அறிக்கை செய்வதுடன் அரசுகளாம் கட்சிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகளினதும் தகவல்களினதும் பரிசீலனையின் அடிப்படையில் பரேரணைகளையும் பொதுவான விதிப்புரைகளையும் வழங்க முடியும். அத்தகைய பிரேரணைகளும் பொதுவான விதப்புரைகளும் அரசுகளாம் கட்சிகளிடமிருந்தான கருத்துரைகள் எவையேனும் இருப்பின், அவற்றுடன் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

2. செயலாளர் நாயகம் குழுவின் அறிக்கைகளை, பெண்களின் நிலைசார் ஆணைக்குழுவிற்கு தகவலறிவிப்பின் பொருட்டு அனுப்பி வைப்பார்.

**உறுப்புரை 22**

சிறப்பு முகவாராண்மைகள், தற்போதைய இணக்க உடன்படிக்கையினது ஏற்பாடுகளின் விரிவினுள் அடங்குபவை தொடர்பில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு உரித்துடையவையாகும். குழு, இணக்க உடன்படிக்கையின் செயல் நிறைவேற்றம் தொடர்பில் சிறப்பு முகவராண்மைகளிடம் அவற்றினது செயற்பாடுகளின் விரிவினுள் இடம்பெறும் பரப்புகளில் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படி அழைப்புவிடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி – VI

**உறுப்புரை 23**

இவ்விணக்க உடன்படிக்கையிலுள்ள எதுவும், ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான சமத்துவத்தை அடைவதற்குக் கூடுதலாக உதவக் கூடிய பின்வருவனவற்றிலான ஏற்பாடுகள் எவற்றையும் பாதிக்க மாட்டாது.

(அ) அரசாம் கட்சியொன்றின் சட்டவாக்கம்.

(ஆ) அவ்வரசுக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் இணக்க உடன்படிக்கை, பொருத்தனை அல்லது உடன்பாடு.

**உறுப்புரை 24**

அரசுகளாம் கட்சிகள் தற்போதைய இணக்க உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளின் முழுமையாக நிறைவேற்றத்தை அடைவதை நோக்கமாகக் கொண்ட அனைத்து நடவடிக்கைகளையும் சர்வதேச மட்டத்தில் எடுத்துக்கொள்ளும் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றன.

**உறுப்புரை 25**

1. தற்போதைய இணக்க உடன்படிக்கை அனைத்து அரசுகளும் கையொப்பமிடுவதகுத் திறந்து விடப்படும்.

2. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் தற்போதைய இணக்க உடன்படிக்கையாம் வைப்பின் காப்பாளராகப் பதவிப்பெயர் அளிக்கப்பட்டுள்ளார்.

3. தற்போதைய இணக்க உடன்படிக்கை வலுவாக்கம் செய்யப்படுவதற்கு (முறையேற்புக்கு) உட்பட்டதாகும். வலுவாக்கம் செய்தற் சாதனங்கள் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் வசம் வைப்புச் செய்யப்படும்.

4. தற்போதைய இணக்க உடன்படிக்கை அனைத்து அரசுகளும் சேர்ந்து கொள்வதற்குத் திறந்து விடப்படும். சேர்தலானது சேர்தற் சாதனமொன்றை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் வசம் வைப்புச் வெய்வதன் மூலம் நிறைவேற்றப்படும்.

**உறுப்புரை 26**

1. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திற்கு முகவரியிட்ட எழுத்திலான ஓர் அறிவிப்பின் மூலம் எந்த வேலையிலும், எந்த ஓர் அரசாம் கட்சியினாலும் தற்போதைய இணக்க உடன் படிக்கையின் மீளாய்விற்கான ஓர் வேண்டுகொள் விடுக்கப்படலாம்.

2. ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை, அத்தகைய ஒரு வேண்டுகோள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் எவையேனும் இருப்பின், அவைபற்றித் தீர்மானிக்கும்.

**உறுப்புரை 21**

1. தற்போதைய இணக்க உடன்படிக்கை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் வசம் இருபதாவது வலுவாக்க அல்லது சேர்தற் சாதனம் வைப்புச் செய்யப்பட்ட தேதியின் பின்னர் முப்பதாம் நாளன்று வலுவிற் புகும்.

2. இருபதாவது வலுவாக்க அல்லது சேர்தற் சாதனம் வைப்புச் செய்யப்பட்டதன் பின், தற்போதைய இணக்க உடன்படிக்கையை வலுவாக்கம் செய்யும் அல்லது அதிற்சேரும் ஒவ்வோரு அரசுக்கும் இவ்விணக்க உடன்படிக்கை அதன் சொந்த வலுவாக்க அல்லது சேர்தற் சாதனம் வைப்புச் செய்யப்பட்ட தேதியின் பின்னர் முப்பதாம் நாளன்று வலுவிற் புகும்.

**உறுப்புரை 28**

1. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம், வலுவாக்கம் செய்யும் அல்லது சேரும் வேளையில் அரசுகளினால் செய்யப்படும் காப்பொதுக்கல்களின் (Reservations) உரை மூலத்தைப் பெற்று அனைத்து நாடுகளுக்கும் அதனை அறிவிப்பார்.

2. தற்போதைய இணக்க உடன்படிக்கையின் குறிகோளுடன் அல்லது நோக்கத்துடன் ஒவ்வாத காப்பொதுக்கலொன்று அனுமதிக்கப் படமாட்டாது.

3. காப்பொதுக்கல்கள் எந்த வேளையிலும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துக்கு முகவரியிட்ட, நீக்க விளைவினைக் கொண்ட அறிவிப்பின் மூலம் மீள அகற்றப்படலாம். செயலாளர் நாயகம் அதுபற்றி அனைத்து நாடுகளுக்கும் அறிவிப்பா. அத்தகைய அறிவிப்பு, அது கிடைக்கப்பெற்ற தேதியன்று செல்லுபடியாகும் தன்மைபெறும்.

**உறுப்புரை 29**

1. தற்போதைய இணக்க உடன்படிக்கையின் பொருள்கோடல் அல்லது பிரயோகம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளாம் கட்சிகளுக்கிடையில் தோன்றி, இணக்கப் பேச்சின் மூலம் தீர்க்கப்படாத பிணக்கு எதுவும், அவர்களுள் ஒருவரின் வேண்டுகோளின் பேரில் நடுத்தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கப்படலாம். நடுத்தீர்ப்புக்கான வேண்டுகோள்விடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் கட்சிகள் நடுத்தீர்ப்புக்கான நிறுவகம் பற்றி இணங்க முடியாதிருப்பின் அக்கட்சிகளுள் எதேனுமொன்று நீதிமன்ற நியதிச்சட்டத்திற்கு இணங்க, வேண்டுகோளின் மூலம் சர்வதேச நீதிமன்றத்திற்குப் பிணக்கினைமாட்டெறிய முடியும்.

2. இவ்விணக்க உடன்படிக்கைக்குக் கைச் சாத்திடும் அல்லது அதனை வலுவாக்கம் செய்யும் அல்லது அதிற் சேரும் வேளையில் அரசாம் கட்சி ஒவ்வொன்றும் இவ்வுறுப்புரையின் பந்தி I இனால் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படுத்தப்படுவதாகக் கருதவில்லை எனப் பிரகடனம் செய்ய முடியும். அத்தகைய காப்பொதுக்கலொன்றைச் செய்துள்ள அரசாம் கட்சி தொடர்பில். ஏனைய அரசுகளாம் கட்சிகள் அப் பந்தியினால் கட்டுப்படுத்தப்பட்டவையாகா.

3. இவ்வுறுப்புரையின் 2 ஆம் பந்திக்கமையக் காப்பொதுக்கலொன்றைச் செய்துள்ள எந்த அரசாம் கட்சியும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துக்கு விடுக்கும் அறிவிப்பு ஒன்றின் மூலம் அக்காப்பொதுக்கலை எந்த வேளையிலும் மீள அகற்ற முடியும்.

**உறுப்புரை 30**

அதிகாரபூர்வ நிலையிற் சமனான சீன, ஆங்கில, பிரான்சிய, இரஷ்ய, ஸ்பானிய உரைமூலங்களைக் கொண்ட இவ்விணக்க உடன்படிக்கை, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் வசம் வைப்புச்செய்யப்படும்.

**வரதட்சணை என்பது வரன் தட்சணை. ஒரு பெண்ணுக்கு ஏற்ற வரனைத் தேர்ந்தேடுக்க பெற்றோர்கள் கொடுக்கும் தட்சணையேயாகும். ஓர் ஆணுக்கு ஒரு பெண் உரிமையாகிறாள் என்பதைக் குறிக்கும் வெளி அடையாளமே அவளுக்கு அவன் கட்டும் தாலிதான். இந்தத் தாலி முதல், பட்டு, மற்ற கல்யாணச் செலவுகள், எதிர்கால நலனுக்காக வங்கியில் சேமிக்க, வாகனங்கள் வாங்க, தன் உடன்பிறந்த சகோதரிகளுக்கு உதவ, அவை போன்ற எல்லாவற்றிற்கும் சேர்த்து பெண்ணிடமிருந்து பகிரங்கமாக அடிக்கப்படும் பெரும் கொள்ளையே வரதட்சணை. பெண் வீட்டிலிருந்து மணமகனுக்குத் தருகின்ற தட்சணை என்பதால் வரதட்சணை. எனவும் அழைக்கப்படுகின்றது. (நன்றி – மகளிர் கண்காணிப்பகம்- இந்தியா)**

# மாணவர் இடைவிலகலும் எதிர்கால மலையகமும்


ஆர். ராமேஷ்
3ஆம் ஆண்டு அரசியல் துறை மாணவன்
பேராதனை பல்கழைகழகம்.


பொதுவாக ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகின்றப்பொழுது மலையக சமூகம் கல்வியில் 30 வருடம் பின்தங்கிய ஒரு சமூகமாகவே காணப்படுகின்றது. இதற்கு இலவச கல்வியை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட கால தாமதமே காரணமாகும். இத்தகைய பின்னடைந்த சமூகத்தில் மாணவர் இடைவிலகல் என்பது அண்மைக் காலமாக பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. இந்த நாட்டில் வாழ்கின்ற ஏனைய சமூகங்கள் கம்யூட்டர் கல்வி, விஞ்ஞானக் கல்வி, தகவல் தொழிநுட்பக் கல்வி, நீடித்த வாழ்க்கைக்கு கல்வி மேலும் தகவல் மைய நூற்றாண்டில் வாழ்வதற்கான கல்வி என்ற நிலையில் சென்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மலையக சமூகமோ இன்னும் 20 ஆம் நூற்றாண்டிலேயே தங்கியுள்ளது.

மலையக கல்வியில் அண்மைக்காலமாக குறிப்பிட்டளவு முன்னேற்றங்களை கண்டுக் கொள்ள முடிந்தாலும் அவற்றிலும் சில பிரச்சினைகள் காணப்படுகின்றது. அதில் மாணவர் இடைவிலகல் முக்கிமான ஒன்றாக காணப்படுகின்றது. மாணவர் இடைவிலகல் என்பது பொதுக் கல்வியை பூர்த்தி செய்யாது பாடசாலை விட்டு மாணவர் விலகுவதாகும். இன்று மலையகத்தில் தோட்டப்புற பாடசாலைகளில் இந்நிலைமையை அதிகமாக கண்டுக் கொள்ள முடியும். கல்வியில் பின்தங்கியுள்ள ஒரு சமூகத்தை மாணவர் இடைவிலகள் மேலும் மோசமாக்கியுள்ளது. ஆகவே இதுபற்றி ஆய்வு செய்வது அவசியமான ஒன்றாகும்.

மாணவர் இடைவிலகலுக்கான காரணங்களாக பின்வருவன குறிப்பிடப்படுகின்றன

- வறுமை,
- குடும்ப பின்னணி,
- சமூகச் சூழல்,
- கற்போரின் மனநிலை,
- பொருளாதார பின்னணி,
- கற்றல் கற்பித்தல் பிரச்சினைகள்,
- பாடசாலை நிர்வாக கடமைகள் திருப்தியின்மை,
- பய உணர்வு,
- குடும்ப பொறுப்பு.
- உடல்உள பிரச்சினைகள்
- பௌதீக வளப்பற்றாக்குறை

மேற்குறிப்பிட்டனவையே மாணவர் இடைவிலகலுக்கான காரணங்களாக அமைகின்றன. இதில் வறுமை முக்கிமான ஓர் அம்சமாக காணப்படுகின்றது. இன்று மலையகத்தில் பெரும்பாலான மாணவர்கள் வறுமைக்காரணமாக தனது கல்வியை இடைநிறுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது. பிள்ளைகளுக்கு கல்வியை தொடரும் ஆர்வம் இருந்தாலும் வறுமைக்காரணமாக இந்நிலை ஏற்படுகிறது. இலங்கையில் வறுமைக்காரணமாக இடைவிலகிய மாணவர்களின் தொகை 48% ஆகவும் தொழில் நிமித்தம் 1% மானோர் இடைவிலகியதாகவும் கல்வியை தொடர்வதற்கு பாடசாலை இல்லாமல் 4% மானோர் இடைவில கியதாகவும் பாலியல் பிரச்சினைக்காரணமாக 14% மானோர் இடைவிலகியதாகவும், பொருத்தமற்ற பாடத்திட்டங்களால் 12% மானோர் இடைவில குவதாகவும் எந்த காரணமும் இன்றி 20%மானோர் இடைவிலகுவதாகவும் ஆய்வறிக்கைகள் குறிப்பிட்டுகின்றன.

இதில் பெருந்தோட்ட துறையைச் சார்ந்த மாணவர்களே அதிகமாக காணப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிரியர் பற்றாக்குறை, கற்றல் செயற்பாடுகளுக்கு அவசியமான உபகரணங்கள் இன்மை நூலக வசதியின்மை, ஆய்வுகூடமின்மை விளையாட்டு மைதானமின்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து வசதியின்மை, பௌதீக வளபற்றாக்குறை என்பவை மாணவர் இடைவிலகளுக்கு காரணமாக உள்ளன.

குறிப்பாக ஆசிரியர் பற்றாக்குறையால் வருடாந்தம் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் இடைவிலகி கல்வியை தொடரமுடியாது நகர்புறங்களுக்கு தொழிலுக்கு செல்லும் நிலைமையை மலையகத்தில் இன்று காணமுடிகின்றது. வருடாந்தம் இடைவிலகும் மாணவர்களில் 75% கொழும்பு போன்ற நகர்புறங்களில் நாட்கூலிக்காக தொழில் செல்லும் நிலைக்காணப்படுகிறது. இவர்களில் பெரும்பாலோனோர் கற்றல் செயற்பாடுகளில் திறமைக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். ஆனாலும் ஆசிரியர் பற்றாக்குறை வெளிப்புறங்களில் சென்று தனது கல்வியை தொடரும் பொருளாதார பின்னணி இன்மை என்பவற்றால் இந்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

பாடசாலை நிர்வாகத்தின் கவனயீனம் ஆசிரியர்-மாணவர் இடையிலான உறவு பேணப்படாமை பாடசாலை நிர்வாகத்தின் மீது மாணவர்களுக்கு அதிருப்தி ஏற்படல், ஆசிரியர்களின் திடீர் இடமாற்றம் அவை மீள நிரப்பப்படாமை இதனால் வகுப்புகள் திடிரென குறைக்கப்படுதல் என்பன இன்று மலையகத்தில் அதிகமாக இடம் பெறுகின்றது. இதனால் மாணவர் இடைவிலகலும் தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்படுகின்றது.

இன்று பதுளை, கேகாலை போன்ற மாவட்டங்களில் சில பின்தங்கிய தோட்டப்புற பாடசாலைகளில் இந்நிலைமையினை தெளிவாக காணமுடியும். இம்மாவட்டங்களில் உள்ள சில தோட்டப்புறங்கில் தரம் 8 அல்லது 9 வரை வகுப்புக் காணப்படும் ஆனால் கற்பிப்பதற்கு மூன்று நான்கு ஆசிரியர்கள் மாத்திரமே காணப்படுவர். இதனால் இப்பாடசாலை மாணவர்களுக்கு சிரான கல்வியை பெற முடியாத நிலையும் ஏற்படுகின்றது. மேலும் தரம் 8 அல்லது 9 வரை படித்து விட்டு இடைநிலைக்கல்வியை வெளிப்புற பாடசாலைகளில் சென்று தொடர்வதற்கு போக்குவரத்து வசதியில்லாத அவல நிலையையும் குறிப்பாக பதுளை மாவட்டத்தில் சில பின்தங்கிய தோட்டப்புறங்களில் காணமுடிகிறது. இதனால் ஒவ்வொரு வருடமும் மாணவர் இடைவிலகல் இவ்வாறான தோட்டப்புற பாடசாலைகளில் அதிகமாகவே உள்ளது.

மலையகத்தில் நகர்ப்புற பாடசாலைகளை விட தோட்டப்புற பாடசாலைகளிலேயே மாணவர் இடைவிலகல் அதிகமாக காணப்படுகிறது போக்குவரத்து வசதியின்மையும் மாவணர்கள் இடைநிலைக்கல்வியை தொடர்வதில் பெறும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. பெற்றோரின் கல்வி மட்டம் குறைவாக இருப்பதால் பிள்ளைகளின் கல்விப்பற்றி அக்கறைக் கொள்ளாமை குறைந்த வருமானம் பிள்ளைகளின் கல்விச் செலவிற்கு ஈடுக் கொடுக்க முடியாத பொருளாதார பின்னணி, பாடசாலை பெருபேறுகளில் காட்டப்படுகின்ற பாராபட்சங்கள், குறை நிலை (குறிப்பாக பாடசாலைகளில்) என்பன மலையகத்தில் மாணவர் இடைவிலகளில் பாதிப்பு செலுத்தும் காரணியாக உள்ளன.

அண்மைகால ஆய்வறிக்கையின்படி இலங்கையில் 15-19 வயதுக்குற்பட்ட50%மானோர் பாடசாலையை விட்டு இடைவிலகுவதாக குறிப்பிடுகிறது. இதில் பெருந்தோட்டத்துறை சார்ந்த மாணவர்களே அதிகமானோர் என எதிர்பார்க்கபடுகிறது. பாடசாலைக்கு மாணவர்கள் செல்லும் வீதமும் மலையகத்தில் குறைவாகவே காணப்படுகிறது. இதனால் போதிய மாணவர்கள் இன்மையால் பல பாடசாலைகளுக்கு மூடுவிழா இடம்பெற்றுள்ளது. இவ்விடயமானது எதிர்கால சமுதாயத்தையே பாதிக்கும் என்பது தின்னமே. இலங்கையில் இவ்வாறு 1000 பாடசாலைகள் மூட்ப்பட்டிருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

இவ்விடயம் மலையகத்தின் கல்வி வளர்ச்சியில் பெறும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. 1987 ஆம் ஆண்டு இலங்கையின் கல்வி வளர்ச்சி 87% ஆக இருந்தது. ஆனால் மலையகத்தின் கல்வி வளர்ச்சி 65% குறைவாகவே காணப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. காரணம் 1987 களில் மலையகத்தில் மாணவர் இடைவிலகல் 70% ஆக காணப்பட்டது.

1997 ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் அறிக்கைப்படி மலையகத்தில் 15 பாடசாலைகள் மூடப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. 1991 ஆம் ஆண்டு அறிக்கையின் படி இலங்கை முழுதும் 15 லட்சம் பேர் பாடசாலையை விட்டு இடைவிலகியிருப்பாதாக குறிப்பிடப்படுகிறது. (20%இடைவிலகல் காணப்பட்டது) 6-14 வயது வரை ஒருவர் கட்டாயக்கல்வியை மேற்கொள்ள வேண்டும் இவ்வயதைக் தாண்ட அதிகமான சிறுவர்கள் கொழும்பு போன்ற நகர்புறங்களில் தொழிலுக்கு செல்லும் நிலைமையே இன்று மலையகத்தில் உருவாகியுள்ளது.மேலும் பெற்றோர்
கள் பிள்ளைகளளை பாடசாலைக்கு சேர்க்க வேண்டிய வயதில் சேர்ப்பதில்லை. சேர்த்து சிறிது காலத்தில் இடைவிலகும் நிலையும் காணப்படுகிறது.

பெற்றோர்களின் கல்வி மட்டம் குறைவாகயிருப்பதனால் பிள்ளைகள் தன் விருப்பப்படி வேலைக்கு அமர்த்தும் நிலையும் காணப்படுகிறது. 6 -14 வயதுக்கு இடைப்பட்ட அதிகமான பெண்பிள்ளைகளும் பாடசாலையை விட்டு இடைவிலகி தொழிலுக்கு செல்கின்றார்கள் இவற்றை விட மலையகத்தில் இடைவிலகல் அதிகரிப்புக்கான காரணம் அரசாங்கத்தின் பாராபட்சமான கல்வி சேவை, இலசக்கல்வியில் காட்டிய வேறுபாடு, சகலருக்கும் கல்வி என்ற கோட்பாட்டை முழுமையாக நடைமுறைபடுத்தாமை என்பவற்றை கூறலாம். ஏற்கனவே 30 வருடம் கல்வியில் பின்தங்கிய ஒரு சமூகத்தில் இப்பொழுது மாணவர் இடைவிலகல் என்பது மேலும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகவே இந்நிலைமைகள் நீக்கப்பட வேண்டும் இதற்காக பல விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளப்பட் வேண்டும் இது பற்றி பாடசாலை மட்டத்திலும் பெற்றோர்கள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் இன்று பல அரச சார்பற்ற நிறுவனங்கள் இடைவிலகிய மாணவர்கள் கல்வியை தொடர்வதற்காக பல செயற்திட்டங்களை கொண்டு நடாத்துகின்றது. திறந்த பாடசாலைகளை ஆரம்பித்து இடைவிலகிய மாணவர்களுக்கு கல்வி வழங்குகின்றது மலையகத்திலும் முழுமையாக இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செயற்திட்டங்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மேலைத்தேய நாடுகளில் மாணவர் இடைவிலகளை தவிர்க்க பல செயற்திட்டங்கள் காணப்படுகின்றன. இந்தியாவில் கிராமிய எழுச்சி திட்டத்தின் மூலம் மாணவர் இடைவிலகலை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான திட்டங்கள் மலையகத்திலும் உருவாக்க வேண்டும்.

இடைவிலகிய மாணவர்கள் கல்வியைத் தொடரும் போது அவர்களுக்கு அவசியமான நூல்கள், நூலக வசதி, போக்குவரத்து வசதி, ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்சி, கற்றில் உபகரணங்கள், கணனி போன்ற வசதிகளை செய்துக் கொடுப்பதன் மூலம் இடைவிலகிய மாணவர்கள் கல்வியை தொடரலாம். இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளவிட்டால் எதிர்கால மலையக கல்வி வளர்ச்சியில் மாணவர் இடைவிலகல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

## HDO – செயற்பாடுகள்

- மனித அபிவிருத்தி தாபனதின் மனிதாபிமான சேவைகள் அம்பறை மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன. முதல் கட்டமாக 12 நிரந்தர வீடுகளை ஜுலை 19ஆம் திகதி மனித அபிவிருத்தி தாபன இயக்குனர் பாதிக்கப்பட்ட மக்களிடம் ஒப்படைத்தார் இந்நிகழ்வில் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த சிஸ்லி, காரைத்தீவு அரசாங்க அதிபர் திரு. இராமகிருஸ்ணன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.





- மனித அபிவிருத்தி தாபனத்தின் பெண்கள் கண்காணிப்பகம் அண்மையில் காரைத்தீவில் தொழில்சார் பயிற்சி முடித்து கொண்ட 54 பெண்களின் தையல் கண்காட்சியும், காரைத்தீவு சிறுவர் கண்காணிப்பகத்தின் பாலர் பாடசலை மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சியும் காரைதீவு விபுலானந்த மணிமண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பெற்றோர், ஆசிரியர் ஆக்கங்களும் காணப்பட்டன.



- மலையகத்தில் பெரும்பாலன மக்களுக்கு அடையால அட்டை இன்றி தவிக்கின்றனர் அவசரகால சட்டதின் கீழ் அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் மலையக இளைஞர்கள் கைதாகின்றனர். இதனால் அவதியுறும் மக்களுக்கு மனித அபிவிருத்தி தாபனமும், மஸ்கெலிய ஆட்ஸ் நிறுவனமும் இணைந்து அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட 2000 தோட்ட மக்களுக்கு அடையாள அட்டை பெற்று கொடுக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைபடுத்தி உள்ளது. இத்திட்டத்தில் இணைந்து அடையாள அட்டை பெற விரும்புவோர் விபரங்களுக்கு எம்மை அனுகலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## என்று தணியும் இந்த .. ?

பெண் படிக்க பணம் இல்லையாம்
பெண்படிச்சாலும் உபயோகம்
இல்லையாம்
அண்ணா, தம்பி மட்டும் பாடசாலை
போகனுமாம்

தம்பி, தங்கச்சிகள நான்
பார்த்துகனுமாம்
அம்மாகூட பல வீட்டு வேலைகள்
செய்யனுமாம்
அம்மா, அப்பா கூட நானும்
உழைக்கனும்
அதுல அண்ணா, தம்பி மட்டும்
பாடசாலை போகனுமாம்

பெண்ணா பிறந்தாலே பாவமாம்
எனக்கு ஒன்னும் புரியல

என்று தனியும் இந்த?..........................



***மனித அபிவிருத்தித் தாபனம்***

மலையக மக்களின் மனித உரிமை, மனித கௌரவம், நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி, மற்றும் சமாதான சகவாழ்வு என்பவற்றுக்காக அம்மக்களுடன் இணைந்து அவர்களின் பங்களிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். அதேவேளை எமது கடந்த கால அனுபவங்களும் செயற்றிறனும், நாடாளாவிய தேசிய வேலைத்திட்டங்களிலும் குறிப்பாக சமாதானம், மனித உரிமை, மனிதாபிமான சேவைகள் குறித்தும் எம்மை நகரச்செய்துள்ளன. அவற்றோடு நிற்காமல், இன்று சர்வதேச, பிராந்திய அமைப்புகளுடனும் இணைந்து நிற்கின்றோம்.

இது எமது அனுபவங்களையும், சவால்களையும், உங்கள் முன்வைப்பதற்கான ஒரு முயற்சியே. என்றாலும் உங்களின் கருத்துக்களுக்கும் ஆக்கங்களுக்கும் ***விழிப்பு*** ஒரு மேடை, உங்களின் ஆக்கத்திறனை எதிர்ப்பார்க்கின்றோம்.

***விழிப்பு***
Editor, Vilippu P.O. Box 171, Kandy 20000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org